(இ) & (உ) இப்பள்ளியில் பணியாற்றிய பயிற்சி பெறாத ஆசிரியர் ஒருவர் தனக்குச் சேரவேண்டிய ஊதிய பாக்கியைப் பெறும் பொருட்டு அப்பள்ளிக்கு 1971 எப்ரல் மாதத்துக்கு வழங்கப்படும் சம்பள மானியத்தை கோர்ட்டு மூலம் ஈடு (attachment) வாங்கியுள்ளார். அப்படியிருந்தும் அப்பள்ளி நிர்வாகி, அவ்வாசிரியருக்குச் சேரவேண்டிய சம்பள பாக்கியைத் தராததால், கோர்ட்டு தீர்ப்பை செயல்படுத்த அவ்வாசிரியர் அப்பள்ளியில் பணிசெய்த காலத்துக்குரிய ஊதியத்தை 6 விழுக்காடு வட்டியுடன் சேர்த்து கணக்கிட்டு மொத்தம் ரூ. 3,045ஐ திருச்சிராப்பள்ளி தலைமை சார்பு நீதிபதி (Principal-Sub Judge) அவர்களுடைய பேருக்கு செலுத்தப்பட்டது. 1970, எப்ரலுக்குச் சேரவேண்டிய சம்பள மானியம் 1970–71–ஆம் ஆண்டிலேயே பள்ளிக்குத் தரப்பட்டுவிட்டது. 1972–73-ஆம் ஆண்டில் அப்பள்ளியில் பல வகுப்புகளில் குறைந்த பட்சம் தேவையான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லாத காரணத்தால் 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதியில் அப்பள்ளி திடீரென்று மூடப்பட்டது. சம்பள மானியத் தொகையை கணக்கிட்டுத்தரத் தேவையான ஆவணங்கள் பள்ளிக் கல்வித்துறைக்குக் கிடைக்கவில்லை. அந்த ஆவணங்களைப் பெற்றதும் மானியத் தொகையை கணக்கிட்டு வழங்க மாவட்டக் கல்வி அலுவலர் தக்க நடவடிக்கை எடுப்பார்.

Scholarships for Research in Tamil Manuscripts.

* 204 *Q.*—Thiru S. S. THENNARASU (on behalf of Thiru K. Arivazhagan): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to (i) institute scholarships for studying and scrutinising Tamil manuscripts in the Government Oriental Manuscripts Library in Madras, (ii) allot funds for it, for preparing a comprehensive catalogue with subject, name and title, (iii) upgrade it into a Research Institute, and (iv) construct a separate building to house the same; and

(*b*) whether steps are being taken to acquire manuscripts now in private hands?

தமிழ் ஏட்டுச் சுவடிகளை ஆராய்வதற்குப் படிப்புதவித் தொகைகள்

திரு எஸ். எஸ். தென்னரசு (திரு க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) (i) சென்னை அரசு கீழ்த்திசை ஏட்டுச் சுவடிகள் நூலகத்தில் உள்ள தமிழ் ஏட்டுச் சுவடிகளைப் படிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும்

படிப்புதவித் தொகைகள் வழங்குதல், (ii) பொருள், பெயர், தலைப்பு ஆகியவற்றுடன் அடங்கிய விரிவான நூல் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்கு நிதிகள் ஒதுக்குதல். (iii) அந்நூலகத்தை ஆராய்ச்சி நிலையமாகத் தரம் உயர்த்துதல், (iv) அந்நூலத்திற்குத் தனிப்பட்ட கட்டிடம் ஒன்றைக் கட்டுதல் ஆகியவற்றிற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) தனிப்பட்டவர்களிடம் தற்போதுள்ள ஏட்டுச் சுவடிகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) (i)லிருந்து (iii) வரை இல்லை.

(iv) அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்திற்காகக் கட்டிடம் கட்டும் கருத்துரு ஒன்று 1974-ல் பரிசீலிக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது.

(இ) கையேட்டுப்படிகள் குறிப்பிட்ட நபரிடம் இருக்கும் விவரம் கியூரேட்டருக்குத் தெரிந்தபின் அவர் அதை வாங்கிப் பாதுகாக்க ஆவன செய்வார். சென்னையில் வசிக்கும் நபருடன் அதை வாங்க நேர்முகமாகத் தொடர்பு கொள்ளப்படும்.

Attenders working in Aided Schools.

* 205 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the attenders working in the aided schools have made a representation to give them a basic pay of Rs. 146; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள் தங்களுக்கு ரூ. 146 அடிப்படைச் சம்பளம் கொடுக்குமாறு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.